செய்தி வெளியீடு எண். –922 நாள்.3.12.2009

<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை</u>
<u>செய்திக் குறிப்பு</u>
<u>மருந்துக் கட்டுப்பாடு இயக்ககம், சென்னை–6</u>

////

போலி மருந்துகள் மற்றும் கலப்பட மருந்துகள் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் பொருட்டு, மத்திய அரசு கடந்த 10.8.2009 அன்று மருந்துகள் மற்றும் அழகுச் சாதனச்சட்டம் 1940 சட்டப்பிரிவுகளில் சில மாறுதல்களைக் கொண்டு வந்தது.

கலப்பட அல்லது போலியான மருந்துகளை விற்பனைக்காக உற்பத்தி செய்வது மற்றும் விற்பதன் மூலம் ஒருவருக்கு அகால மரணத்தையோ அல்லது இந்திய குற்றவியல் தண்டனை சட்டம் பிரிவு 320–க்கு உட்பட்ட கொடுங்காயத்தையோ ஏற்படுத்தினாலோ அத்தகைய மருந்து தயாரிப்பாளருக்கு குறைந்த பட்ச தண்டனை 10 வருடங்களுக்குக் குறையாமலும் அதிக பட்சமாக ஆயுள் கால தண்டனையுடன் குறைந்த பட்சமாக 10 இலட்சம் ரூபாய் அல்லது கைப்பற்றப்பட்ட மருந்துகளின் மதிப்புத்தொகையில் மூன்று மடங்கு இதில் எது அதிகமோ அந்தத் தொகை அபராதமாகவும் விதிக்கப்படும்.

இது போன்ற போலி மருந்து தயாரிப்பவர்கள் பற்றிய விபரங்களுடன் கூடிய தகவல் தெரிவிப்பவர்கள், எதிர்நோக்கும் ஆபத்துகளை கருத்திற் கொண்டு, தகவல் தருபவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க மத்திய அரசு ஒரு முறையை கடைப்பிடிக்க உள்ளது.

இந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், மருந்துகள் அழகுச் சாதனப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பற்றி தகவல் தருபவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

இந்த ஊக்கத்தொகை, கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பில் அதிக பட்சமாக 20 விழுக்காடு அல்லது ரூபாய் 25 இலட்சத்திற்கு மிகாமல் ஒவ்வொரு தகவலுக்கும் வழங்கப்படும்.

இந்த ஊக்கத்தொகையில் முதல் தவணையாக 25 விழுக்காடு தொகை, நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் போது வழங்கப்படும்.

அடுத்த 25 விழுக்காடு ஊக்கத்தொகை, முதல் நீதிமன்றத்தில் அரசாங்கத்திற்குச் சாதகமாக வழக்கு முடியும் போது வழங்கப்படும்.

மீதமுள்ள 50 விழுக்காடு ஊக்கத்தொகை நாட்டின் எந்த நீதிமன்றத்திலும் மேல் முறையீடு நிலுவையில் இல்லாமல், கடைசியாக வழக்கு அரசாங்கத்திற்கு சாதகமாக முடியும் போது வழங்கப்படும்.

மத்திய, மாநில அரசாங்கங்களின் கீழ் இயங்கும் மருந்துக் கட்டுப்பாடு துறையினருக்கோ அல்லது ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கோ, போலி மருந்துகள் பற்றிய தகவல்களைக் கொடுக்க, தகவல் தெரிவிப்பவர்கள் கீழ்க்கண்ட இணையதளத்தை தொடர்பு கொள்ளவும்.

**www.cdsco.nic.in**

வி.கு. சுப்புராஜ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.